<u>**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்**</u>

<u>**EP No.50/2023**</u>

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 11–ம் நாள் செவ்வாய்கிழமை **ம.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுசீலா | தொழில் | |
| க/பெ | : அய்யாசாமி | கிராமம் | |
| வயது | : | தாலுகா | |
| | : | மாவட்டம் | |

<u>**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**</u>

<u>**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

நான் தாக்கல் செய்துள்ள வாகன விபத்து இழப்பீட்டு மனு ஒரு தலைப்பட்சமாக முடிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி மனுதாரர் மனு தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் வீட்டுமனை கட்டிடம் கட்டும் ஒப்பந்ததாரர் தொழில் செய்வது குறித்து ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் வருடம் ரூபாய் 25 லட்சத்திற்கு மேல் வருமானம் பெற்று வருவதை காட்ட நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மனுபத்தி 7 மற்றும் 8–ல் குறிப்பிட்டுள்ள கணக்கீடுகள் தவறு என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் எந்தவிதமான வேலைக்கும் செல்லாமல் வீட்டில் தான் உள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தொடர்பாக நான் பொது நபர்களை வைத்து பைசல் செய்தேனா என்றால் இல்லை. நான் மனுவில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.11.12 18:04:55 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.